# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 1009/2016/ந

ஆணை எண்: 0177/2016

நாள்: 03/12/2016

திரு. அ.செ. மோகன்,
எண் 8, முதல் தெரு,
தி.சு.லட்சுமணன் நகர்,
குரோம்பேட்டை,
சென்னை – 600 044.

மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி மற்றும் இருவர்.

எதிர் மனுதாரர்

## ஆணை:

மனுதாரரது 27.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு 28.09.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்:1009/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

மேற்படி முறையீட்டு மனுவில் பல்லவபுரம் நகராட்சியில் தூய்மை பாரதம் திட்டத்தின்கீழ் தனி நபர் கழிப்பிடங்கள் கட்ட அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.12,000/-ல் பயனாளியின் பங்குத் தொகை ரூ.4000/-ம் போக மீதமுள்ள மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பங்குத் தொகை ரூ.8,000/-த்தை பயனாளிகள் கடன் பெற்று அவரது சொந்த செலவில் கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டு பல மாதங்கள் ஆன பிறகு பயனாளிகளின் வங்கி கணக்கில் ரூ.6,000/- மட்டும் வரவு வைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.2000/- ஏமாற்றப்படுவதாகவும் சில பயனாளிகளுக்கு ரூ.8,000/- முழுவதுமாக வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கழிப்பறையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் வெளியேறுவதற்கான குழாய்கள் பதிக்கப்பட்டு அக்குழாய்களை முறையாக பாதாளச் சாக்கடை தொட்டி/கழிவு நீர் தொட்டியுடன் இணைத்தல் பணிகள் மற்றும் செலவுகள் பயனாளிகளாலேயே செய்யப்படுவதாகவும் ஆனால் இச்செலவினத் தொகையை நகராட்சி அலுவலர்கள் ஒப்பந்ததாரர்கள் மூலம் பெற்றுக் கொண்டு ஊழல் செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் புகார்கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவிப்பாணை எண்: 1009/16/ந நாள்: 29.09.2016ன் மூலம் ஆணையிடப்பட்டது. மேலும், மனுதாரர் தரப்பிலான ஆதாரங்களை சமர்ப்பித்திட ஏதுவாக மனுதாரருக்கான விசாரணை 11.11.2016 அன்று நிர்ணயிக்கப்பட்டு அ.ம.எண்.1009/16/ந நாள்: 17.10.16ன் மூலம் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.5541/16/எச்1 நாள்:17.10.2016 இம்முறை மன்ற நடுவத்திற்கு 20.10.16 அன்று வரப்பெற்றுள்ளது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டுள்ள விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"பல்லவபுரம் நகராட்சி தூய்மை பாரதம் - தூய்மை தமிழகம் - திட்டத்தின்கீழ் தனி நபர் கழிப்பறை அமைத்தல் பணியில் 2011 SECC (Socio Economic Caste Census) கணக்கெடுப்பின்படி 1710 ஆகும். மத்திய அரசு பங்குத் தொகை ரூ.4000/- மாநில அரசு பங்குத் தொகை ரூ.2000/- மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.2000/- ஆக மொத்தம் ரூ.8000/- வீதம் ஒவ்வொரு பயனாளியும் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர். இக்கணக்கெடுப்பின்படி 2015-16ம் ஆண்டிற்கு 684 பயனாளிகள் இலக்காகவும் 2016-17ல் 1026 இலக்காகவும் நிர்ணயித்து பொது மக்களுக்கு, அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைந்து பல முறை விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டது. மக்களின் பங்களிப்போடு இத்திட்டம் பல்லவபுரம் நகராட்சியில் 2015-16ம் வருட இலக்கினை சிறப்பான முறையில் அடைந்து 684 பயனாளிகளுக்கும் கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. (பெறப்பட்ட மான்ய தொகை ரூ.54.72 லட்சம், வழங்கப்பட்ட தொகை ரூ.54.72 லட்சம்) கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்ட பயனாளிகளுக்கு ரூ.8000/-க்கு குறைவாக யாருக்கும் வழங்கப்படவில்லை.

13.10.2016ம் தேதி வரைக்கும் தனிநபர் கழிப்பிடம் மொத்தம் 837 எண்ணம் கட்டி முடிக்கப்பட்டு முழு அளவில் ரூ.8000/- வீதம் 684 பயனாளிகளுக்கும் அவர்களது வங்கிக் கணக்கில் ECS மூலம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ளவர்களுக்கு மான்யத் தொகை பெற்று பணம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், பயனாளிகளுக்கு கழிப்பிடம் தம்முடைய சொந்த பொறுப்பில் கட்டிக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டு அவற்றை நகராட்சி பணியாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் மூலம் இதுவரை கழிப்பிடம் ஏதும் கட்டிக் கொடுக்கப்படவில்லை.

கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டவர்களுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வைப்புத் தொகை இல்லாமல் வழங்கப்பட்டும், மாதாந்திர கட்டணம் வசூல் செய்யும் வகையில் மன்றத்தின் அனுமதி வழங்கப்பட்டு அதன்படி இணைப்புகள் வழங்கப்பட்டது.

பாதாள சாக்கடை இணைப்பு இல்லாத பகுதிகளில் சிமெண்ட் உறை (வட்டவடிவான உறை) மூலம் கழிவுநீர் தொட்டி ஏற்படுத்தப்பட்டு இணைப்பு வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் சில பயனாளிகள் கழிப்பிடத்திற்கு தாங்களாகவே முன்வந்து அவர்களுடைய சொந்த செலவில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்தியுள்ளார்கள். தனி நபர் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ள அனைத்துக்கும் முறையாக இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி அறிக்கையின்படி மனுதாரர் கூறியுள்ள முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என நகராட்சி ஆணையரால் உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர் 11.11.16 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணைக்கு ஆஜராகாததுடன் தனது தரப்பிலான ஆதாரங்கள் எதனையும் தாக்கல் செய்யவும் தவறியுள்ளார். எனவே, பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கையில் பயனாளிகளுக்கு மின்னணு பரிமாற்றம் மூலம் (ECS) தொகை வரவு வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ளதாலும், பிற புகார்களும் மறுக்கப்பட்டு உரிய விளக்கங்கள் அளித்துள்ளதாலும் மனுதாரரது முறையீட்டு மனு தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2016ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3-ம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

20/12/2016

செயலாளர்.

19.12.16

19/12/16

<u>பெறுநர்</u>

1. திரு. அ.செ. மோகன்,
   எண் 8, முதல் தெரு,
   தி.சு.லட்சுமணன் நகர்,
   குரோம்பேட்டை,
   சென்னை – 600 044.

2. நகராட்சி ஆணையர்,
   பல்லவபுரம் நகராட்சி,
   குரோம்பேட்டை,
   சென்னை – 600 044.